பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
05 01 2025 **SUNDAY** **7.15 PM**
ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் வளர்ச்சிக்கு குடிமக்கள் அனைவரும் தேசப்பற்றுடன் செயல்படுவது மிகவும் அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

- பாராசிட்டமால் மாத்திரைகளை தயாரிப்பதற்கான புதிய தொழில்நுட்பம் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டிருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

- 2040-ஆம் ஆண்டுக்குள் புதிய விண்வெளி தொழில்நுட்பங்களை உருவாக்க இஸ்ரோ முயற்சி மேற்கொண்டுள்ளதாக சந்திரயான்-3 திட்ட இயக்குனர் திரு வீரமுத்துவேல் கூறியுள்ளார்.

- குஜராத்தில் கடலோர காவல்படை ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதில் இரண்டு விமானிகள் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர்.

- மாற்றுத்திறனாளிகள் பங்கேற்கும் சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>*-- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>>**

இந்தியாவின் வளர்ச்சிக்கு “தேசப்பற்றும் - தேசம் முதலில்” என்ற அணுகுமுறையும் அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

தில்லியில் குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்கவுள்ள என் சி சி மாணவர்களிடையே உரையாற்றிய அவர், மக்களிடையே தேசப்பற்று இருந்தால்தான் எந்தவொரு நாடும் வளர்ச்சியடையும் என்றார்.

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சமூக நல்லிணக்கம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, சுயசார்பு, தேசப்பற்று மற்றும் குடிமக்களுக்கான கடமைகளை சிறப்பாக மேற்கொள்வது அவசியம் என்றும் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

காய்ச்சல் மற்றும் வலி நிவாரணியாக பயன்படுத்தப்படும் பாராசிட்டமால் மாத்திரைகளை தயாரிப்பதற்கான புதிய தொழில்நுட்பத்தை அறிவியல் தொழிலக ஆராய்ச்சிக்கழகமான CSIR உருவாக்கியிருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்த அமைப்பின் நிறுவன தின விழாவில் பேசிய அவர், இந்த புதிய கண்டுபிடிப்பு பாராசிட்டமால் மாத்திரை உற்பத்தியில் இந்தியாவை சுயசார்புடையதாக மாற்றும் என்றார்.

இந்த மாத்திரைகளை தயாரிப்பதற்கான மூலப்பொருட்களுக்கு வெளிநாடுகளை சார்ந்திருப்பதையும் இந்த முயற்சி பெருமளவு குறைக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும், Nafithromycin போன்ற ஆன்டிபயாடிக் மருந்துகளும் தற்போது உள்நாட்டு தொழில்நுட்பத்திலேயே தயாரிக்கப்படுவதாகவும் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இந்திய கைத்தறி தொழில்நுட்பக்கழகத்தின் புதிய நிரந்தர வளாகத்தை மேற்குவங்க மாநிலம் Fulia-யாவில் மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் இன்று திறந்துவைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், ஆறு கைத்தறி தொழில்நுட்பக்கழகங்களுக்கான ஒருங்கிணைந்த இணையதளம் தொடங்கப்பட்டதுடன், தேசிய அளவில் முதல் பத்து இடங்களில் உள்ள நிறுவனங்களுக்கு பதக்கம் மற்றும் தகுதி தரச்சான்றிதழ்களையும் அமைச்சர் கிரிராஜ் சிங் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த புதிய வளாகம் மூலம், கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகள் இந்த நிறுவனத்தில் படிப்பதற்கும், கைத்தறித்துறைக்கு சேவையாற்றவும் வாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார்.

மேற்குவங்க கைத்தறி நெசவின் பாரம்பரியத்தை அப்போது அவர் எடுத்துரைத்தார்.

2030-ஆம் ஆண்டு வாக்கில், ஜவுளி வர்த்தகத்தை 300 பில்லியன் டாலர் அளவிற்கு அதிகரிக்கவும், இத்துறை மூலம் ஆறு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க ஜவுளி அமைச்சகம் உறுதிபூண்டுள்ளதாகவும் திரு கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ், சுமார் 27 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மத்திய எஃகு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம், 14 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், புதுதில்லி விஞ்ஞான் பவனில் நாளை நடைபெறும் நிகழ்ச்சியில் மத்திய எஃகு துறை அமைச்சர் திரு குமாரசாமி கலந்துகொண்டு, இத்திட்டத்தின் அடுத்தக்கட்டத்தை தொடங்கிவைக்க உள்ளார்.

மேலும், புதிதாக பயனடைய விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்களை அமைச்சர் பெற இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

உடல் நலனை ஆரோக்கியமாக பராமரிக்க ஏதுவாக மக்கள் சைக்கிள் ஓட்டுவது ஊக்குவிக்கப்படும் என மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

உடல் உறுதி இந்தியா இயக்கத்தின்கீழ், தமது போர்பந்தர் தொகுதியில் நடைபெற்ற “ஞாயிற்றுக்கிழமைகளில் சைக்கிள்” என்ற பயணத்தில் பங்கேற்ற அவர் உள்ளூர் மக்களுடன் இணைந்து சைக்கிள் ஓட்டினார்.

அப்போது பேசிய அவர், இந்திய சைக்கிள் கூட்டமைப்புடன் இணைந்து, இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாட்டின் கிராமப்புற மக்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை வழங்கும் விதமாக கிராமப்புற உற்பத்திப்பொருட்களின் கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக நபார்டு வங்கியின் தலைவர் திரு கே வி Shaji தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் ஆறு நாள் கிராமின் பாரத் திருவிழாவின் இடையே செய்தியாளர்களிடம் பேசிய அவர், நபார்டு வங்கியும், மத்திய அரசின் நிதிச்சேவைகள் துறையும் இணைந்து இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளதாக கூறினார்.

நாட்டின் கிராமப்புற தொழில்முனைவோர் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை போற்றும் விதமாக நடைபெறும் இந்த கண்காட்சியில், இயற்கை விவசாய உற்பத்திப்பொருட்கள், புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மகளிர் தொழில்முனைவோர் மற்றும் பழங்குடியினரின் உற்பத்திப் பொருட்களுக்கான தேவையை அதிகரிக்க செய்யவும் நபார்டு வங்கி நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக திரு Shaji கூறினார்.

<<<<<<>>>>>

2040-ஆம் ஆண்டுக்குள் புதிய விண்வெளி தொழில்நுட்பங்களை உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சந்திரயான்-3 திட்ட இயக்குனர் திரு வீரமுத்துவேல் கூறியுள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் ரத்னகிரியில் தனியார் பள்ளி நிகழ்ச்சியில் பேசிய அவர், செயற்கைக்கோளை அடிப்படையாக கொண்டு பல்வேறு தொழில்நுட்பங்கள் இயங்கி வருவதாக தெரிவித்தார்.

வாழ்க்கையில் வெற்றிபெற அறிவியல் மற்றும் பொறியியல் தொழில்நுட்பங்களுடன் கடின உழைப்பும் அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

செயற்கைக்கோளின் பல்வேறு வகை குறித்தும் திரு வீரமுத்துவேல் மாணவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

<<<<<<>>>>>

கீழடியில் தமிழரின் பெருமையை வெளிக்கொண்டு வந்ததற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசே காரணம் என்று பிஜேபி மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கீழடி அகழ்வாராய்ச்சிகளை தீவிரப்படுத்த வேண்டும் என மாநில பிஜேபி-தான் மத்திய அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனிடம் கேட்டுக்கொண்டதாக கூறினார்.

தமிழகத்தில் பொங்கல் பரிசு தொகுப்புடன், பரிசுத்தொகையை அறிவிக்க வேண்டும் எனவும் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு போட்டிக்கான முன்னேற்பாட்டுப்பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதனால், அவனியாபுரம் பகுதி விழாக்கோலம் பூண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - ரகுராஜா – 48 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

குஜராத் மாநிலம் போர்பந்தரில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கடலோர காவல்படை ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதில் இரண்டு விமானிகள் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர்.

வழக்கமான பயிற்சியின்போது போர்பந்தர் விமான நிலையத்தில் தரையிறங்க முற்பட்டபோது இந்த விபத்து நிகழ்ந்ததாக கடலோர காவல்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

மணிப்பூரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையில் ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மாநில காவல்துறை மற்றும் பிற பாதுகாப்பு அமைப்புகளுடன் இணைந்து, ராணுவம் மேற்கொண்ட இந்த நடவடிக்கையின்போது இம்பால் மேற்கு, சந்தேல், தவ்பால் உள்ளிட்ட மாவட்டங்களின் மலைப்பகுதியிலும், சமவெளிப்பகுதியிலும் போர்காலத்தை போன்ற ஆயுதக்கிடங்குகள் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த கிடங்குகளில் இருந்து 42 ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாக ராணுவம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மாற்றுத்திறனாளிகள் பங்கேற்கும் சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

விக்ராந்த் ரவீந்திர Keni தலைமையிலான இந்த அணியில் 17 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கையில் இம்மாதம் 12-ஆம் தேதிமுதல், 21-ஆம் தேதிவரை இப்போட்டி நடைபெறவுள்ளது.

இந்தியா தனது முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது

-------

பிரிட்டன் ஓபன் ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனஹத் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-----------

புதுதில்லியில் நடைபெற்ற தேசிய துப்பாக்கிச்சுடுதல் போட்டியின் பத்து மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் வருண் தோமர் தங்கப்பதக்கத்தையும், ப்ரதியும் சிங் வெள்ளிப்பதக்கத்தையும், ஆகாஷ் பரத்வாஜ் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

<<<<<<END>>>>>